# கருத்தமைதி – ஜுன் 2020

## புனித பிரான்சிஸின் எளிமையின் வழித்தடத்தில்

**முன்னுரை:**

புனித பிரான்சிஸ் அசிசியின் ஆன்மீகத்தைப் பின்பற்றும் நாம் அனைவரும் எளிமைக்கோலம் பூண்டு எளியவரில் எளியவராக பிறப்பு முதல் இறப்புவரை எளிமையாய் வாழ்ந்து, நம்மையும் எளிமை வாழ்வு வாழ அழைப்பு விடுத்துக்கொண்டேயிருக்கும் இயேசு கிறிஸ்துவை வாழ்க்கையிலே கண்டுபாவிக்க வேண்டும்.

அன்புச் சகோதரிகளே! பஞ்ச பூதங்களைப் படைத்து தமது அபார ஆற்றலினாலும், வல்லமையினாலும் எல்லா உயிர்களையும் இயக்கிக்கொண்டிருக்கும், சர்வ வல்லவர் இந்த சிறிய வெண்ணிற அப்ப வடிவிலே காட்சிக்கு மிகவும் எளியவராய் நமது இல்லக்கோவிலிலே குடிகொண்டு நமது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தேவையான வரங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார். அவர் போன்று நமது சிந்தனை, சொல், செயல்களில் எளிமையானவர்களாக எல்லோரும் அணுகக்கூடியவர்களாக வாழ வரம் வேண்டி நற்கருணை நாதரை நமது மத்தியில் இப்பாடல் வழி ஆர்வமாய் வரவேற்போம்.

**பாடல்** : இறைவா எழுந்தே வரவேண்டும்....

எளிமை, என்பதே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மூச்சு. அவரது ஆன்மீக, மானசீகக் காதலர் புனித அசிசியாரிடமிருந்து கற்றுக்கொண்ட காதல் இது. அவர் தங்கும் இடமும் எளிமை, அவர் பயணிக்கும் ஊர்தியிலும் எளிமை, அவர் பழகும் விதத்திலும் எளிமை, இதுதான் அவரது மேன்மை. எனவே தான் ஜார்ஜ் மரியோ பெர்க்கோலியோ தான் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதே நாளில் அர்ஜெண்டினாவில் உள்ள தன் மக்களுக்கு
ரோமை நகருக்கு அவசரப்பட்டு வந்துவிட வேண்டாம். மாறாக இங்கு வரத்தேவையான விமானப் பயணச்சீட்டுச் செலவைக் கணக்கிட்டு அந்த தொகையை ஏழைகளுக்குக் கொடுத்து உதவுங்கள் என்று அவரால் கூறமுடிந்தது. இந்தக் காலத்தில் இப்படி ஒரு தலைவரைப் பெற்றதற்கு திருஅவை பெருமைப்படவேண்டும். நம் தலைவரின் வழியில் தான் நாமும் எளிமையில் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

இன்று துறவிகளாகிய நம்மிடம் இருக்கவேண்டிய பண்புகளில் மிக முக்கியமான, உன்னதமான பண்பு எளிமை. இன்றைய சமுதாயம் நம்மை ஆடம்பரமான செல்வம் மிகுந்த துறவியாக பார்க்க விரும்பவில்லை. மாறாக எளிமையான வாழ்க்கை வாழக்கூடிய, எளிமையாகப் பேசக்கூடிய, எளிமையாகப் பழகக்கூடிய துறவிகளையே விரும்புகிறது. நமது வாழ்வு எளிமையாக இருக்கும்போதுதான் நமது இலக்கு மக்களிடத்தில் நெருங்கிப் பணிசெய்ய முடிகிறது. நாங்கள் துறவிகள் என்று நான்கு சுவருக்குள் இருந்து செல்வச் செழிப்போடு வாழும் வாழ்க்கையை விட்டு, எளிய மக்களிடம் சென்று பணிசெய்ய வேண்டுமானால் துறவிகளாகிய நம்முடைய வாழ்வில், செயலில், சிந்தனையில், பழக்க வழக்கங்களில், பயன்படுத்தும் பொருட்களில் பிறரை அணுகும் முறையில் எளிமை இருக்கவேண்டும்.

நமது இல்லத்தைவிட்டு வெளியே வந்தால் நாம் பணிசெய்யும் பணித்தளங்களில், பழகும் மனிதர்களிடத்தில் உள்ள ஆடம்பர வாழ்க்கை, பயன்படுத்தும் விலைமதிப்புள்ள பொருட்கள், மனிதன் என்ற முறையில் நம்மையும் பாதிக்கின்றது.

இன்னும் ஒருபடி மேலே சென்றால் தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளினால் கார்பரேட் கம்பெனிகளின் ஆதிக்கம் மக்களிடம் மட்டுமல்ல, துறவிகளாகிய நம்மிடத்திலும் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. விளம்பரங்களின் தாக்கத்தினால் விலைமதிப்புள்ள ஆடம்பரமான பொருட்களைப் பயன்படுத்தும் முறை நாளுக்கு நாள் நம்மிடம் பெருகிவந்துகொண்டிருக்கின்றது. இந்நிலை இன்னும் அதிகரித்துக்கொண்டே சென்றால் துறவு வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். எனவே இந்த நாளில் நமது துறவு வாழ்க்கையைச் சீர்தூக்கிப்பார்க்க, சபையின் ஆரம்பகாலத்தில் இருந்த நம் மூத்த சகோதரிகளின் எளிய வாழ்வை மீண்டுமாக நமது இல்லங்களில் கொண்டுவர, நாம் பின்பற்றுகின்ற ஆன்மீகத்தந்தை புனித பிரான்சிஸின் எளிமையை நமதாக்க, நமது வாழ்வை சீர்தூக்கிப்பார்க்க அழைக்கப்படுகின்றோம். எனவே இந்த நாளை முழுமையாக அர்த்தமுள்ள முறையில் செலவழிக்க வேண்டுவோம்.

**பாடல்**............

**தியானிப்பதற்கு**....

**எளிமையே வலிமை :**

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எளிமையை ஏற்றுக்கொள்வது என்பது இன்றைய ஆடம்பர உலகில் எளிதானதன்று. அது பெரும்பான்மையோரால் ஏளனத்திற்கு உட்பட்டு எள்ளி நகையாடப்படுகிறது. உண்மையில் எளிமை ஏற்றத்திற்குரியது, இனிமையானது. ஆனால் எளிமையைக் கஞ்சத்தனமென்று தவறாகப் பொருள்கொண்டு, மற்றவர்கள் நம்மை ஒன்றுமில்லாதவராக நினைத்துவிடுவார்களோ எனக்கருதிக்கொண்டு ஆடம்பர செலவு செய்துவிட்டு கடன்காரர்களாக வாழ்ந்துவருகிறார்கள் பலர். மனிதன் ஒருவன்தான் தன் தகுதிக்கேற்ப வாழவேண்டும் என்று கருதுவதில்லை.

"மாடுகள் ஆகாயத்தில் பறப்பதற்கு ஆசைப்படுவதில்லை
மீன்கள் தரையில் ஓடுவதற்கு ஆசைப்படுவதில்லை".

மனிதர்கள்தான் தங்கள் தகுதிக்கு மீறி வாழ ஆசைப்படுகின்ற காரணத்தினால் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்தல், விலை உயர்ந்த பொருட்களைப் பயன்படுத்துதல், சொகுசான வாகனங்களில் பயணித்தல், உடலுக்கு ஒவ்வாமை தருகின்ற உணவுப்பொருட்களை உண்ணுதல் இவ்வாறு எதிலும் எளிமைத் தன்மை மறைந்து ஆடம்பரங்களும், ஆர்ப்பாட்டங்களும் மிகுந்து காணப்படுகின்றனர். இதற்கு துறவிகளாகிய நாமும் விதிவிலக்கல்ல

உலகில் வந்துசெல்கின்ற வசதிவாய்ப்புகள் விளம்பரங்கள் அத்தனையையும் நாமும் அனுபவித்தே ஆக வேண்டும் என்ற முனைப்புடன் வாழும் நமக்கு அண்ணல் அசிசியின் எளிமை என்ற பண்பானது சவால் விடுக்கின்றது.

எளிமை என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு : எளிமை தான் எத்தனை வகை? அவை….

1. பொருள் எளிமை
2. நடத்தை எளிமை
3. செயல்முறை எளிமை
4. மொழி எளிமை
5. உணவு எளிமை

**பொருள் எளிமை : (Material Simplicity)**

ஒருவா் பெரும் கோடீஸ்வரராக இருப்பார் ஆனால் தன்னுடைய செல்வப்பகட்டை வெளிப்படுத்தவில்லை என்றால் அவா் பொருள் எளிமைக்குச் சொந்தக்காரா். அவா் சாதாரணத் தட்டில்தான் சாப்பிடுவார். அவருக்குத் தெரியும் வெள்ளித்தட்டில், சாப்பிட்டாலும் சாதாரண தட்டில் சாப்பிட்டாலும் உண்பது உணவைத்தானே தவிர தட்டையல்ல. அவா் உடையிலும் எளிமை தெரியும், பயன்படுத்தும் பொருட்களிலும் எளிமை தெரியும். இப்படிபட்டவா்கள் எளிமையை தமது வாழ்வின் இலட்சியமாகக் கடைபிடிப்பார்கள்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் - திருக்குறள் : 35-341

ஒருவா் எந்த எந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவராக இருக்கிறாரோ அந்த அந்தப் பொருளால் அவா் துன்பம் அடைவதில்லை.

அண்மையில் உலகயையே உருட்டிப்போட்டு ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்காது எல்லோரும் சமம் என்று உலகிற்கு புரிய வைத்த “கொரோனா” நோய் நமக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதில் எளிமையைக் கற்றுத்தந்தது. கிடைப்பதை உண்டு, கிடைப்பதைப் பயன்படுத்தி, பணமும் வசதியும் இருந்தாலும் பொருட்களை வாங்கமுடியாத நிலையை சந்திக்க வைத்தது. ஆம்! “இருப்பதிலும் இல்லாமை” என்ற நிலையை வாழக் கற்றுக்கொடுத்தது. சிறிது நேரம் அமைதியில் சிந்திப்போம்.

**நடத்தையில் எளிமை (Behavioral Simplicity) :**

நடத்தை எளிமை என்பது எல்லாரிடமும் எளிமையாகப் பழகுவது. சாதாரண ஏழை, எளிய, பாமர மக்களிடமும் அன்பாக, பாசத்தோடு பழகுவது. பாகுபாடின்றி அனைவரையும் அன்புடன், மரியாதையுடன் நடத்துவது. எப்பொழுதும், எங்கேயும் பொறுமை காட்டுவது.

சிந்தனைக்கு : வாசிக்க - லூக் : 18 : 9-14

**செயல் முறையில் எளிமை (Procedural Simplicity) :**

செயல்முறை எளிமை என்பது தான் பணிசெய்யும் எல்லா இடங்களிலும் மற்றும் எந்த செயலிலும் எளிமையைக் கடைபிடிப்பது. செயல் திட்டங்களை எளிமைப்படுத்துவது. எதையும் எவரும் எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்களைத் தருவது. சட்டங்கள் மற்றும் நியதிகளை எளிமையாக்குவது. எந்தச் செயலைச் செய்தாலும் அவற்றை எளிய முறையில் செய்வது.

சிந்தனைக்கு : வாசிக்க ஊற்றுப்புத்தகம் - அறவுரைகள் (எண் : 14,19)

**மொழியில் எளிமை (Language Simplicity) :**

மொழி எளிமை என்பது நாம் பேசும் அல்லது எழுதும் வார்த்தைகள் அனைத்தும் அனைவரும் குறிப்பாக மிகச் சாதாரண மனிதர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான வார்த்தைகளைப் பயன்படுத்துவது.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." (குறள் : 3 : 28)

**விளக்கம்** :

பயன்நிறைந்த மொழிகளையே பேசும் பற்றற்ற துறவியாரின் பெருமையை அவருடைய ஆணையாக வழங்கும் மந்திரங்களே உலகுக்கு உணர்த்திவிடும்.

தன்னை மையப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பேசுவதைவிட பிறருக்குப் பயனுள்ளதாக பிறரை வாழவைக்கக்கூடிய பிறரின் வளர்ச்சிக்கு உதவுமாறு நமது பேச்சும் எழுத்தும் எளிமையானதாக இருக்கவேண்டும்.

**உணவில் எளிமை (Food Simplicity) :**

பொதுவாக துறவற இல்லங்களில் இப்படிப் பேசுவது வழக்கம். "சாப்பாடு நன்றாக இருந்தால் பாதிப்பிரச்சனை தீர்ந்துவிடும்" என்று. சகோதரிகளே சிந்திப்போம். எளிமையான உணவைச் சாப்பிட்டு நீண்ட நாட்கள் நோயில்லாமல் வாழ்ந்து பணிசெய்வதா? அல்லது ஆடம்பரமான உணவை உண்டு நோய்களை நமது சொத்தாகக் கொண்டு இறைவன் வசிக்கும் இல்லமாகிய நமது உடலைப் பாழ்படுத்துவதா? உணவுமுறைகளில் எளிமையைக் கடைபிடித்து நீண்ட நாட்கள் நலமோடு வாழ்ந்து வளமாகப் பணிசெய்ய முயற்சிப்போம்.

உடலும், உள்ளமும் நலம் பெற எளிய உணவினை உண்ணுதல் வேண்டும். நாக்கின் சுவையைவிட ஆறடி உடலைப் பாழாக்காமல் எளிய உணவை உண்பது அவசியம்.

இவை அனைத்தையும் தமது வாழ்வில் வாழ்ந்துகாட்டிய நமது அண்ணல் அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர் தமது வாழ்வின்வழி நமக்கு விட்டுச்சென்ற விழுமியங்களை தாமஸ் செலோனா தமது எழுத்துக்களில் இவ்வாறு பொறித்துவைத்துள்ளார்.

**பாடல் : நீயாக நான் மாற**…..

**எளிமை என்பது :-**

**நிகழ்வு – 1**

புனித பிரான்சிஸ் எளிமைப்பண்பு தன்னிலும் தன் சகோதரர்களிடத்திலும் பிரதிபலிக்கப்படவேண்டும் என்று அதிக கவனம் செலுத்தினார். ஏனெனில் இந்த எளிமைதான் எல்லா வரங்களிலும் மேலான வரமாக அவருக்கு அமைந்தது. இந்த எளிமை கடவுளால் அவருக்குக் கொடுக்கப்பட்ட கொடை. ஞானத்தின் சகோதரி, நீதியின் தாய். இறைவனில் நிறைவுகண்டு மற்றது அனைத்தும் வீண் என்று ஒதுக்கிவிடும் இந்த ஒரு நிலையையே அவர் பெரிதும் போற்றினார். எளிமை என்பது தன்னுணர்வு பூண்டு யாரையும் தீர்ப்பிடாத பண்பு.

தன்னுடைய அதிகாரத்தை விட்டுக்கொடுத்து தம்மையே பிறருக்கு அடிமைப்படுத்திக்கொள்வது. இறைவாக்கியங்களில் ஈடுபாடின்றி, சுற்றிவளைத்து பேசுவதையும், அணிசெய்வதையும் விட்டொழித்து ஆழ்ந்த நிறைஉண்மைகளைத் தேடி அலைவதுமாகும். எனவே நமது தந்தை பிரான்சிஸ் இந்த புண்ணியத்தை படித்தவர்களிடமும், படிக்காதவர்களிடமும் வலியுறுத்தினார். இதனை ஞானத்தின் பகையாக அன்று, ஞானத்தின் சகோதரியாகக் கருதினார். எனவே தான் எளிமை என்ற புண்ணியத்தைப் பற்றிப் புகழந்துபேசுகையில் அவர் “ஞான அரசியே, நீ போற்றப்படுக, ஆண்டவர் உன்னுடைய சகோதரி எளிமையின் வாயிலாக உன்னை இரட்சிக்கிறார்” என்றார்.

**சிந்தனைக்கு :**

என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் எளிமையை நான் எவ்வாறு ஏற்று கடைபிடிக்கிறேன்?

ஞானத்தின் சகோதரியாக, நீதியின் தாயாக — எளிமையை என்னில் காண முற்படுகிறேனா?

இறைவனில் மட்டும் நிறைவு கண்டு மற்ற அனைத்தும் வீண் என்று ஒதுக்கி விடும் நிலையை என்னில் நான் கடைபிடிக்க முடிகிறதா?

**பாடல் : என் தேடல் நீ என் தெய்வமே....**

**நிகழ்வு — 2**

அசிசிக்கு அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தின் வழியே பிரான்சிஸ் சென்று கொண்டிருந்தபொழுது வயலில் உழுதுகொண்டிருந்த ஜான் என்னும் எளியவர் இவரிடம் வந்து “நீங்கள் என்னை உங்கள் சகோதரர்களில் ஒருவராக எற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இறைவனுக்கு ஊழியம் செய்ய நீண்ட நாட்களாக ஆவல் கொண்டிருந்தேன்” என்றார். பிரான்சிஸ் இவரின் எளிமைத் தனத்தைக் கண்டு மகிழ்வுற்று, எங்களுள் ஒருவராக உமக்கு விருப்பம் இருப்பின் உன்னிடத்தில் உள்ள அனைத்தையும் ஏழைகளுக்கு அளித்துவிடவேண்டும் என்றார். உடனே அவர் கலப்பையில் பூட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்த்து ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாம் என்றிருந்தார். அச்சமயம் செய்தியைக் கேட்டு பெற்றோர் ஓடிவந்தனர்.

அவர்களது நாட்டம் மகனின் இழப்பைப் பற்றி அல்லாமல், குறிப்பாக அந்த எருதின்மேலேயே இருந்தது. இதை அறிந்து கொண்ட நம் பிரான்சிஸ் “வருத்தப்படாதீர்கள்” உங்கள் விருப்பத்தின்படியே “எருதினை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் சகோதரரை நான் எடுத்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு சகோதரர் ஜானை அழைத்துவந்து அவருக்குத் துறவற ஆடை அணிவித்து எளிமைத்தனத்தின் பொருட்டு அவரை தம் நெருங்கிய நண்பராக வைத்துக்கொண்டார்.

**சிந்தனைக்கு :**

பெற்றோர், உற்றார், உறவினர், சொத்து, சுகம் அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பற்றிக்கொண்டு வாழும் நல்லெண்ணத்தோடு துறவற வாழ்வில் அடியெடுத்து வைத்திருக்கும் நமது இன்றைய வாழ்வும் மனநிலையும் எப்படிப்பட்டதாக உள்ளது? எதைப்பற்றிக்கொண்டு வாழ்ந்து வருகிறோம்?

**பஜன் : உம்மைப் பற்றிக்கொள்ள வேண்டும் இயேசுவே....**

**நிகழ்வு – 3**

புனித பிரான்சிஸ் எங்கு தியானம் செய்கிறாரோ, அல்லது எந்த வழிமுறைகளைப் பின்பற்றுகிறாரோ அதனை அப்படியே செய்வது சகோதரர் ஜானின் வழக்கம். எடுத்துக்காட்டாக பிரான்சிஸ் எச்சில் உமிழ்ந்தால் இவரும் உமிழ்வார். அவர் இருமினால் இவரும் இருமுவார். அவரின் அழுகையில் கூட இவரும் பங்குகொள்வார். அவர் கைகளை உயர்த்திச் செபிக்கையில் இவரும் அவ்வாறே செய்வார். இதனை உற்று நோக்கிய புனித பிரான்சிஸ் சகோதரர் ஜானிடம் இதற்கான காரணத்தைக் கேட்டதற்கு சகோதாரர் கூறிய பதில் “ நீங்கள் செய்வதனைத்தையும் பின்பற்றுவதாக வாக்களித்திருக்கிறேன்.

எனவே நான் எதைச் செய்யாதுவிடினும் அது தவறாகிவிடும்” என்பதாகும். இவரின் எளிமைத்தனம் கண்டு மிக்க மகிழ்வுற்று எதிர்காலத்தில் இவ்வாறு செய்யவேண்டாம் என்று அன்பாக கண்டிப்பார் பிரான்சிஸ். இவ்வாறாக எளிமையைப் பின்பற்றி வாழ்ந்த சகோதரர் ஜானை பிரான்சிஸ் சகோதரர் என்று அழைக்காது “புனிதர் ஜான்” என்றே அழைத்தார். இவரது வாழ்க்கை நமக்குப் பாடமாக அமைகிறது.

**சிந்தனைக்கு** :

சிறுவயதிலிருந்தே நம்மிடம் காணப்பட்ட எதார்த்தமான நல்லபண்புகளைத் தொடர்ந்து கடைபிடித்து வாழ்ந்து வருகிறோமா?

அல்லது

இப்படிச் செய்தால் மற்றவர்கள் நம்மைக் கேலிசெய்வார்கள் தவறாகப் பேசுவார்கள் என்பதற்காக நம்மிடம் உள்ள நற்பண்புகளை வெளிக்காட்டாமல் பச்சோந்தித்தனமாக வாழ்கிறோமா?

**பாடல் : ஒருவரம் நான் கேட்கிறேன்**…..

**நிகழ்வு – 4**

பிரான்சிஸ் தமது சகோதரர்களிடத்தில் எவ்வளவு எளியவராக தம்மை வெளிப்படுத்தினார் என்பதை இந்நிகழ்வு நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இதனை அவர் ஓர் உவமை வாயிலாக எடுத்துரைத்தார். அனைத்து சகோதரர்களும் இணைந்த ஒரு கூட்டம் நடக்கின்றது என்று எடுத்துக்கொள்வோம். அக்கூட்டத்தில் படித்தவர்களும், பாமரர்களும் பங்கேற்கின்றனர். அதில் படித்த ஒருவரும், படிக்காத ஒருவரும் பிரசங்கம் செய்ய நியமிக்கப்படுகின்றனர். முதலில் அறிவில் சிறந்தவரான படித்தவர் தனக்குள்ளே உள்ள அறிவுத்தனத்தை படிக்காத இவர்களிடம் காட்டமுடியாது.

எனவே ஆடம்பரமின்றிப் பேசுவதே சாலச்சிறந்தது என்று கருதினார். குறிப்பிட்ட நாளும் வந்தது. இவர் எளிமை உடை தரித்து சாம்பலைத் தலையில் பூசியவராய் மறையுரை ஆற்றத்தொடங்கினார்.

**அவர் கூறியது** :

நாம் பெரிய காரியங்களைச் செய்வதாக வாக்களித்திருக்கின்றோம். ஆனால் அதைவிட பெரிய காரியங்களை இறைவன் நமக்கு அருள்வார். உலக இன்பங்கள் மண்ணில் மறையக்கூடியவை. அதனால் அடையக்கூடிய தண்டனை முடிவற்றது. துன்பம் குறைந்த காலஅளவே. ஆனால் மகிமை அளவற்றது.

அழைக்கப்பட்டோர் பலர். தேர்ந்துகொள்ளப்பட்டோர் ஒருசிலரே. அவரவருக்கு ஏற்ற சன்மானம் வழங்கப்படும் என்று கூறினார். இவரது வார்த்தைகள் அனைவரின் உள்ளத்தையும் தொட்டது. கூட்டத்தில் இருந்த அனைவரும் கண்ணீர் வடிக்கத்தொடங்கி உண்மையிலேயே இவர் புனிதர் என்று போற்றத்தொடங்கினர்.

பின்னர் படிக்காத அந்த எளியவர் தனக்குள் தான் பேச நினைத்த அனைத்தையும் அவர் பேசிவிட்டார் எனினும் என்ன சொல்வதென்று எனக்குத்தெரியும் என்று கூறிக்கொண்டார். அடுத்தநாள் கூட்டத்தின் மேடைக்கு வந்து முதன்முதலில் ஒரு திருப்பாடலை வாசித்துக்காட்டி அதனை தமது பிரசங்கத்தின் கருத்தாக எடுத்துரைத்தார்.

ஆவியினால் தூண்டப்பட்டவராய் மிக அழகாக, ஆழமாக, தெளிவாக பிரசங்கம் செய்த இவரது ஆற்றலைக் கண்டு அனைவரும் உண்மையிலேயே கடவுள் எளியவரிடத்தில் தான் தம்மை வெளிப்படுத்துகிறார் என்று போற்றினர்.

இந்த இருநிகழ்வுகளிலிருந்தும் படித்தவராயிருந்தாலும் படிக்காதவராயிருந்தாலும் எளிமையோடு இருப்பவரைத்தான் ஆண்டவர் ஆட்கொண்டு வழிநடத்துகிறார் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

**சிந்தனைக்கு :**

எளியவர்களிடத்தில் தான் ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பதை நம்புகிறோமா? நம்மிடையே எளியவராக வாழும் சகோதரிகளின் வார்த்தைகளை, செயல்பாடுகளை எந்த அளவு நாம் மதிக்கின்றோம்?

கற்ற கல்வியினால் பெற்ற அறிவைக்கொண்டு சாதிக்கமுடியாத நற்செயல்களை எளியவராக வாழும்போது கிடைக்கும் தெய்வீக ஞானத்தின் மூலம் சாதிக்கமுடியும் என்பதை நம்புகிறோமா?

அதற்காக முயற்சிகள் மேற்கொள்கிறோமா?

பாடல் : **இறையிடம் சேர்ப்பது அன்புவழி**......

**இன்றைய காலக்கட்டத்தில் எட்டாக்கனியாகும் எளிமை :**

இவற்றிலிருந்து மனித இனத்தை மீட்டெடுப்பது எப்படி என்ற இந்நிகழ்வு மூலம் சுய ஆய்வுசெய்து விடை கண்டுபிடிப்போம். ஆடம்பர வாழ்க்கை என்பது மிக அதிகம் செலவு செய்யக்கூடியதாக மாறிவிடுகிறது. குடிநீருக்குப் பதிலாக குளிர்பானங்கள் குக்கிராமங்களில் கூட கிடைக்கும் நிலையினை நுகர்வுக்கலாச்சாரம் உருவாக்கி வருகிறது.

ஒரு முறை புத்தரிடம் அவரது சீடர் ஒருவர் ஒரு மாற்றுத்துணி கேட்டாராம். உடனடியாக புத்தர் ஏன் நீங்கள் உபயோகப்படுத்திய துணி என்னவாயிற்று என்று வினவினாராம். அதற்கு சீடரோ அது கிழிந்துவிட்டது. எனவே சமையலறையில் பாத்திரம் ஏற்றி இறக்கப் பயன்படும் கரிக்கந்தலாக்கிவிட்டேன் என்றாராம். அப்படியா! இதற்கு முன்பு கரிகந்தலாக இருந்த துணி என்னவானது என்றாராம். அதற்கு சீடரோ உடனடியாக அதனை காலை மிதித்துத்துடைக்கும் துணியாகப் பயன்படுத்திக்கொள்ளப் போட்டிருக்கிறேன் என்றாராம்.

அடுத்தபடியாக புத்தர் ஏற்கனவே இருந்த துணியை என்னசெய்தீர்கள் என்றாராம். அதனை நன்றாகத் துவைத்து விளக்குகளுக்கான திரிகளாகப் பயன்படுத்தவுள்ளேன் என்றாராம். அப்படியா! அந்த அறையைத் திறந்து ஒரு புதிய துணியை

எடுத்துக்கொள்ளுங்கள் என்றாராம் புத்தர். அந்த அளவுக்கு எந்த ஒரு பொருளையும் வீணாக்காது பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தார். அந்த அளவுக்கு புத்தர் எவ்வளவு எளியவராக திகழ்ந்தார் என்பதை இந்த நிகழ்வு வழியாக அறிய வருகிறோம்.

சாப்பிட இலையைப் பயன்படுத்தி, கோவில்பிரசாதங்களை தொன்னையில் கொடுத்து சுற்றுசூழலுக்கு மாசில்லாமல் வாழ்ந்தவர்கள் நாம். ஆனால் இன்றைய நுகர்வு மையக் கலாச்சாரம் மறுசுழற்சியினை மறுதலிக்கச்செய்யும் கலாச்சாரம் ஆகும். இன்று கிராமத்திற்குச் சென்றால் பலரது தாகத்தைத் தணிப்பதாக அந்நியநாட்டுப் பானங்கள். பலநேரங்களில் விருந்தோம்பல் என்ற பெயரில் தனது வீட்டுத் தண்ணீரைக் கொடுக்கத் தயங்குவோர் பின்பற்றும் விந்தையிது.

**பாடல் : படைப்பு எல்லாம் உமக்கே சொந்தம்...**

**எளிமை :**

எளிமை என்ற வார்த்தை மிகவும் ஆடம்பரமாகப் போனதன் விளைவால் நாம் அனுபவிக்கும் சிக்கல்கள் கொஞ்சநெஞ்சமல்ல. சாதாரண வாழ்க்கையைத் தொலைத்ததன் விளைவாக எந்த நேரமும் பணம் செலவழித்தால் மட்டுமே வாழ்க்கையினை நகர்த்த இயலும் என்ற நிலையில் வாழ்ந்து வருகிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தூய்மையான காற்று, தண்ணீர், பால் என்ற பண்டங்களை விரும்பி கிராமங்களை நோக்கிப் பலரும் படையெடுக்கத்துவங்கினர். ஆனால் இன்று விவசாயம் இலாபமற்றதாகி விளைநிலங்களைப் பலரும் விற்கவும் முன்வந்துள்ளனர். இதனால் விளைநிலங்கள் பல வீட்டுமனைகளாகும் கொடுமை நிகழ்ந்துவருகின்றது. முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் போன்றோரின் புறா திட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் ஒருபக்கம் பரிசீலிக்கப்பட்டு வந்தாலும் கிராமப்புறங்களை நகரமயமாக்கத்தின் நுகர்வுக்கலாச்சாரத்தின் தாக்கம் சுற்றுச்சூழலையும் மிகவும் மாசடையச் செய்துவருகின்றது. நாம் எவ்வளவு செல்வந்தர்களாக வேண்டுமானாலும் ஆகலாம், எவ்வளவு பெரிய வாழ்க்கையும் வாழலாம். ஆனால் உணவையும், தண்ணீரையும் காற்றையும் பயன்படுத்தாமல் வாழமுடியாது என்பதை நமக்குப்பின்வரும் இளைய தலைமுறையினருக்கு யார் எப்படிப் போதிக்கப்போகிறோம்?.

ஸ்மார்ட் போனில் உணவைக் கொண்டுவர ஆணைதான் இடமுடியும். உணவைத் தயாரிக்க விவசாய விளைபொருட்கள் தேவை என்பது உணவு தயாரிக்கும் ஊழியருக்கு மட்டுமே தெரியும். காலம் வருமுன் நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.

விழிப்புணர்வினை எங்கே, எப்போது, எப்படி ஏற்படுத்தப்போகிறோம் என்பதைப் பற்றி இந்நேரத்தில் ஆண்டவர் பாதம் அமர்ந்துள்ள நாம் அமைதியில் ஆய்வுசெய்வோம். முழுமையாக நம் தந்தை பிரான்சிஸின் எளிமையைப் பின்பற்றக் கடினமென நினைத்தாலும் நமக்கேற்ற பாணியில் எளிமை என்ற பண்பிற்கு என்ன விளக்கம் தரப்போகிறோம் என்ற உள்ள உணர்வுகளை உரசிப்பார்த்து விடைதேடுவோம். அவற்றை நம் தனிப்பட்ட வாழ்வில், குழுமத்தில், சபையில் வாழ்ந்திட நல் மனதை, தியாக உள்ளத்தை, எதார்த்தமான நடை, உடை, பாவனைகளைத் தொலைத்துவிட்ட பழைய எளிமையான வாழ்க்கை முறையை வாழ்ந்திட வரம் கேட்டு நம்மை முழுமையாக ஆண்டவரிடம் அர்ப்பணித்து அருளைப் பெற்றுக்கொள்வோம்.

**பாடல் : இதயம் பாடும் இனிய பாடல்....**

**அமைதியில் ஆண்டவரோடு உறவாட...**

**நாம் வாழும் காலத்தில் எளிமையோடு வாழ்ந்தவர்கள் பற்றி....**

**மேதகு ஆயர் சிங்கராயர் :**

சேலம் மறைமாவட்டத்தில் நான்காவது ஆயராக 2000 ஆம் ஆண்டில் பொறுப்பேற்று இருபது ஆண்டுகள் மறைமாவட்டத்தில் மக்களின் ஆயராகப் பணியாற்றியவர். எளிமையான வாழ்க்கை முறையாலும், செபம் நிறைந்த ஆன்மீக வாழ்வாலும் மக்களின் ஆயராகக் கொண்டாடப்பட்டார். இவர் பழகுவதற்கு இனியவர், நேர்மையாளர், நீதிமான், ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டம் நடத்துவதில் வல்லவர், நல்ல ஓட்டுநர், பொதுப்போக்குவரத்தைப் பெரிய அளவில் தன் பயணத்திற்காகப் பயன்படுத்தியவர், தன் வேலைகளைத் தாமே செய்துகொள்ளக் கூடிய நல்ல பணியாளர். தற்போது பணி ஓய்வுபெற்று, ஆயராகப் பொறுப்பேற்றபோது தான் கொண்டு வந்த இரு சக்கர வாகனத்தைத் தானே ஓட்டிக் கொண்டு சேலத்திற்கு அருகிலுள்ள கருப்பூர் என்னும் குக்கிராமம் சென்று அங்கு தங்கி அங்குள்ள இறைமக்களோடு தனது பணிவாழ்வைத் தொடர்கிறார்.

**அன்னை தெரசா :**

"ஏழைகள் நிலவில் இருந்தால் அங்கும் சென்று அவர்களுக்குச் சேவை செய்யத் தயார் என்று சொன்னார்". இதற்காகவே வாழ்வில் வசதிகளையெல்லாம் துறந்துவிட்டு வாடிய மக்களுக்கு உழைக்கத் தயாரானார். உலக மக்கள் சந்திக்கும் துன்பங்களையும், துயரங்களையும் தெரசா போக்குவதற்கு முற்பட்டபோது அவருக்குத் துணையாக வந்த நண்பர்கள் ஐவர். அன்பு, அகிம்சை, கருணை, **எளிமை**, பக்தி இவைகள் தான்.

**காமராசர் :**

ஏழ்மையில் பிறந்து கடினமாக உழைத்து, தலைமைப்பொறுப்பிற்கு வந்தபிறகு எல்லா வசதிகளும் இருந்தாலும் எளிமையாகவே வாழ்ந்த தலைவர்களுள் முக்கியமானவர் இவர். எளிமை என்ற பண்புக்குச் சொந்தக்காரர். தனது பதவிக்காலத்தில் எளிமையாக இருந்ததால் தான் நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும் பயன்தரக்கூடிய பல எண்ணற்ற திட்டங்களைக் கொண்டுவர முடிந்தது. இவர் இறந்தபொழுது ரொக்கம் ரூபாய் 136, இருஜோடி செருப்புகள், நான்கு ஜோடி வேஷ்டி சட்டைகள் ஆகியவை மட்டுமே அவரது வீட்டில் இருந்தன. இவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபொழுது கிராமங்கள்தோறும் அரசு பள்ளிகளை நிறுவினார். தமிழகத்தில் கல்லணைக்குப்பிறகு அனைத்து அணைகளும் கட்டப்பட்டது இவர் காலத்தில்தான். தமிழகத்திற்கு ஏராளமான தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டதும் இவர்காலத்தில்தான். இப்படி இவருடைய சாதனைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்காக உழைக்க அடிப்படையாக இருந்தது இவருடைய **எளியவாழ்வு.**

நாம் பிறந்த வீட்டில் வாழ்ந்ததுபோன்ற எளிய வாழ்க்கை முறையை வாழ்ந்து வருகின்றோமா? அப்போது காணப்பட்ட எதையும் விட்டுக்கொடுத்து, பிறர் மகிழ்வதைப் பார்த்து, தானும் மகிழ்ந்த அனுபவங்களைக் கொண்டுவரமுடிகிறதா?

நமது சிந்தனைகள், வார்த்தைகள், நடை உடை பாவனைகள், உணவு போன்றவற்றின் எளிமையை கடைபிடிக்கமுடிகிறதா என சிந்தித்து, தவறிய தருணங்களுக்காக மனம் வருந்துவோம். எளியவராய் இவ்வுலகில் அவதரித்து எளியராகவே வாழ்ந்து இறந்து உயிர்த்த இயேசு நமக்கு விடுக்கும் செய்தி…மகளே, நீ எளியவளாக வாழும்போது மட்டுமே என்னையும் எனது வழியையும் பின்பற்றி வாழ்ந்த புனித அசிசியின் ஆன்மீகத்தையும் பின்பற்றுபவளாய் வாழமுடியும். உனது பதில் என்ன? இன்று நம் ஒவ்வொருவரையும் பார்த்துக்கேட்கிறார்.

நற்கருணை ஆண்டவரிடம் நமது மனதைத் திறந்து பதிலைக் கூறுவோம். பிறரை மாற்ற நினைப்பதைவிட நான் மாறவேண்டும். என் வாழ்வு மாற்றம் பெற வேண்டும் என ஆண்டவரிடம் மாற்றத்திற்காய் மன்றாடுவோம்.

**சிந்தனைக்கு**

எதில் மகிழ்ச்சி? மாடமாளிகை வாழ்வா? சாதாரண வாழ்வா?
பணமும் பகட்டுமாய் வாழ்வதிலா? எளிமையாய் வாழ்வதிலா?
உன் மனதைத் தொட்டுப்பார்.
எதில் மகிழ்ச்சி?
கோடிகோடியாய் நீ உழைத்து உன் ஆரோக்கியத்தை இழந்து நீ சேர்க்கும் பணத்திலா?
நிஜமாகவே நீ இப்படி வாழ்வதில் மகிழ்ச்சியாக இருக்கின்றாயா?
உன் உள்ளத்தைக் கேள் அது உண்மையைச் சொல்லும்.

“உன் பணத்தால் மனநிம்மதியை வாங்கிட முடியுமா?
மகிழ்ச்சியான பொழுதுகளை வாங்கிட முடியுமா?
உயிரான உறவுகளைத்தான் வாங்கிட முடியுமா?
உண்மையான அன்பைத் தான் வாங்கிட முடியுமா?” சிந்தித்துப்பார்…

எதில் மகிழ்ச்சி… வசதியான வாழ்விலா?...எளிமையான வாழ்விலா?...

**இறுதி செபம் :**

இறைமையை விட்டு மனிதரான இயேசுவே! நீர் செல்வந்தராய் இருந்தும் எமக்காக எளியவராக உருவெடுத்து சொந்தமென்று சொல்லிக்கொள்ள எந்தவொரு சொத்துமின்றி முழுவதும் வெறுமையானவராக வாழ்ந்தீர். அதனால் தான் சமுதாயத்தில் கடைநிலையில் வாழ்ந்த ஏழை எளியவரோடு உம்மையே ஐக்கியப்படுத்திக்கொண்டு எளியவரில் எளியவராக பணம், பொருள், பட்டம், பதவி எதிலும் பற்றின்றி தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தீர். உம்மைப் பிரதிபலித்து வாழ்ந்து வருகின்ற நாங்களும் சுயநலக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து எளியமனம் கொண்டவராக வாழவும் அதன்மூலம் விண்ணரசை உரிமையாக்கிக்கொள்ளவும் அருள்புரிவீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

***Prepared by***

SR. JEYANTHI (SAGAYA HEMALATHA) (1005) and SR. BERNADETH MARY (1052)